செய்தி வெளியீடு எண்.04 நாள்.06.01.2021

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை மாவட்டம் புழல் மத்திய சிறை-1ல் காலியாக உள்ள தொழிற்நுட்ப பணியிடங்களான மின் கம்பியாளர் (Wire man) பணியிடத்திற்கு விருப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதிகள்:-** மின் கம்பியாளர் பணியிடத்திற்கு - 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (மூன்று வருடங்களுக்கும் குறையாத காலத்திற்கு மின்செயல்பாடு மற்றும் பராமரிப்பில் நடைமுறை அனுபவம், அதில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் சம்பந்தப்பட்ட மின் பராமரிப்பு பணிகளில் செலவிடப்பட்டிருக்க வேண்டும்.

சென்னை தொழில்நுட்ப பள்ளி, அல்லது மின்சார வாரிய தலைமை பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்தின் வயர்மேன் சான்றிதழ் வைத்திருக்கும் நபர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை அனுபவத்தின் காலம் இரண்டு ஆண்டுகளாக குறைக்கப்படும் அல்லது D.G.E. & T.Diploma in Trade of Lineman and wireman or National Trade Certificate in the Trade of Wiremanor National Apprentice Certificate in the Trade of Wireman கல்வித்தகுதி கொண்ட நபர்கள் மற்றும் ஒரு வருட நடைமுறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கு ஊதிய விகிதம் ரூ. 18200-57900/-என்ற ஊதிய விகித அடிப்படையில் வழங்கப்படும்.

**வயது வரம்பு:**

(அதிகப்பட்சமாக) எஸ்.சி./எஸ்.சி.ஏ-35, எஸ்.டி- 35, பிற்படுத்தப்பட்டோர் -32, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 32, ஓ.சி-30 இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் 18.01.2021ஆம் தேதிக்குள் **சிறைக்கண்காணிப்பாளர், மத்திய சிறை-1, (தண்டனை ) புழல், சென்னை- 66 தொலைபேசி எண்.044-26590615 என்ற முகவரிக்கு வந்து சேர வேண்டும்,** 18.01.2021-க்கு மாலை 5.00 மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01